ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 28.01.2019 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 நவெம்பர்

### முக்கியபண்புகள்

- இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தொடர்ந்து 2018 நவெம்பரில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை (ஆண்டுக்காண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தது.
- 2018 நவெம்பரில் (ஆண்டுக்காண்டு) ஏற்றுமதிகள் 4.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் 9.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.
- சுற்றுலா பருவகாலம் ஆரம்பமாகியதுடன் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மீண்டும் வலுவடைந்து நவெம்பரில் 18.2 சதவீதம் கொண்ட (ஆண்டுக்காண்டு) வளர்ச்சியைப் பதிவுசெய்தன. சுற்றுலாத்துறை 2019ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக உத்வேகம் மிக்க செயலாற்றத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- 2018 நவெம்பரில் தொழிலாளர் பணவலுப்பல்கள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 0.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.
- 2018 நவெம்பர் காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் மீது அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. இது செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் தலையீட்டினை அவசியமாக்கியது.
- 2018 நவெம்பர் இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.0 பில்லியன்களாக அமைந்து 3.7 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டன.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | நவெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | நவெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - நவெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - நவெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 941 | 980 | 4.1 | 10,341 | 10,856 | 5.0 |
| இறக்குமதிகள் | 1,940 | 1,765 | -9.1 | 18,931 | 20,498 | 8.3 |
| வர்த்தக மீதி (தேறிய) | -999 | -785 | | -8,590 | -9,642 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 311 | 367 | 18.2 | 3,471 | 3,905 | 12.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 588(இ) | 555 | -5.7 | 6,493(இ) | 6,431 | -0.9 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -11 | -30 | | 267 | -29 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 337 | 83 | | 5,327 | 4,937 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 140 | - | | 1,543 | 698 | |
| நீண்ட காலக் கடன்கள் | 197 | 83 | | 1,284 | 739 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 1,000 | 1,000 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 167 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 693 | 1,801 | |
| திரண்ட நிலுவை | | | | 2,005 | -807 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.

(இ) திருத்தப்பட்டது.

(ஈ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.


(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்றுவிகிதம்

- இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2017 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2018 நவெம்பரில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தது. எனினும் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் பதினொரு மாதகாலப் பகுதியில் விரிவடைந்தது.


- அதேவேளை, ஏற்றுமதி நியதிகளில் இறக்குமதிகளின் தொடர்பான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்றுவிகிதம் 2018 நவெம்பரில் 112.8 சுட்டெண் புள்ளிகளுக்கு (ஆண்டுக்காண்டு அடிப்படையில்) 1.6 சதவீதத்தினால் மேம்பட்டமைக்கு இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியின் உதவியுடன் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

**வரைபடம் 1: மாதாந்த வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் - 2018**




மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் -2018**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வணிகப் பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2018 நவெம்பரில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 980 மில்லியனுக்கு 4.1 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) மிதமாக அதிகரித்தன. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகள் தூண்டுதலாக அமைந்த வேளையில் வேளாண்மை ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.


- கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ், புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 நவெம்பரில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் முக்கிய தூண்டுதல்களாக அமைந்தன. மேலும் இந்தியா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியச் சந்தை போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள், புடவைகள் மற்றும் ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்களின் அதிகரித்த ஏற்றுமதிகளுடன் சேர்ந்து அதிகரித்தன. 2018 நவெம்பரில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து 2017 நவெம்பருடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட சிறிதளவு குறைப்பிற்கு மத்தியிலும், நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள் விலைகள் உயர்வடைந்தமையைப் பிரதிபலித்தன. 2018 நவெம்பர் காலப்பகுதியில் பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு அவற்றின் அனைத்து துணை வகைகளினதும் மேம்பட்ட செயலாற்றமே காரணமாகும். மேலும் 2018 நவெம்பரில் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை இறப்பர் உற்பத்திகள் மற்றும் அடிப்படை உலோகம் மற்றும் அவற்றின் பொருட்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் உயர்வடைந்து கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்கு பங்களித்தன. எனினும், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணம், தோல் உற்பத்திகள், பயணப்பொருட்கள் மற்றும் காலணி என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 நவெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

- இம்மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் காய்கறி தவிர்ந்த பெரும்பாலும் அனைத்து துணை வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாக அமைந்தது. தாழ்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018 நவெம்பரில் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

இம்மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு வாசனைத்திரவியங்களின் பெரும்பாலான வகைகளின் குறைந்த அளவுகளே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும் தெங்கு ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மற்றும் உள்ளீடு அல்லாத உற்பத்திகளில் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. ஒன்று சேர்ந்த நியதிகளில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான கடல் உணவு ஏற்றுமதிகளில் அதிகரிப்பு காணப்பட்ட போதும் 2018 நவெம்பரில் கடல் உணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சி கண்டன.


- 2018 நவெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 1.1 சதவீதத்தினால் அதிகரித்து 2017 நவெம்பரில் காணப்பட்ட அளவு மற்றும் அலகொன்றிற்கான பெறுமதிச் சுட்டெண் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் விலைகளிலும் பார்க்க அதிகரித்த அளவுகளே ஏற்றமதியின் வளர்ச்சிக்கு தூண்டுதலாக அமைந்தமையினை சுட்டிக்காட்டின.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | நவெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | நவெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - நவெ 2017 ஐ.அ.டொ. மில் | சன - நவெ 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **713.5** | **787.9** | **10.4** | **7,745.6** | **8,444.9** | **9.0** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 28.4 | 33.9 | 19.1 | 359.8 | 423.8 | 17.8 |
| விலங்குத்தீன் | 8.0 | 8.5 | 5.8 | 70.2 | 99.6 | 41.9 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 424.3 | 469.8 | 10.7 | 4,562.0 | 4,824.3 | 5.7 |
| இதில் ஆடைகள் | 399.0 | 438.5 | 9.9 | 4,294.1 | 4,501.2 | 4.8 |
| புடவைகள் | 17.7 | 22.5 | 26.9 | 188.0 | 235.9 | 25.5 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.6 | 8.8 | 15.2 | 79.8 | 87.2 | 9.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 67.3 | 71.3 | 5.9 | 760.8 | 798.9 | 5.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 22.5 | 20.3 | (9.7) | 236.7 | 259.1 | 9.5 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 28.3 | 37.4 | 32.3 | 340.8 | 401.6 | 17.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.6 | 6.4 | (2.3) | 157.6 | 111.9 | (29.0) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 44.2 | 56.9 | 28.8 | 371.9 | 569.2 | 53.0 |
| இரசாயன உற்பத்திகள் | 11.8 | 12.0 | 1.6 | 134.0 | 153.6 | 14.6 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.6 | 11.9 | 3.3 | 126.2 | 128.8 | 2.1 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 6.6 | 4.4 | (33.2) | 44.5 | 29.3 | (34.3) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.9 | 10.8 | (15.9) | 144.2 | 139.0 | (3.7) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.8 | 6.4 | (6.8) | 66.5 | 70.3 | 5.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 11.8 | 14.6 | 23.7 | 105.7 | 153.1 | 44.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.7 | 2.6 | (5.1) | 30.8 | 29.3 | (5.0) |
| ஏனையவை | 19.7 | 20.7 | 5.1 | 233.8 | 253.3 | 8.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **224.1** | **187.8** | **(16.2)** | **2,547.5** | **2,362.7** | **(7.3)** |
| தேயிலை | 127.0 | 103.2 | (18.8) | 1,402.9 | 1,311.4 | (6.5) |
| இறப்பர் | 2.3 | 2.2 | (5.1) | 35.7 | 29.7 | (16.7) |
| தேங்காய் | 25.7 | 20.5 | (20.5) | 329.0 | 287.1 | (12.7) |
| வாசனைத்திரவியங்கள் | 33.7 | 27.7 | (17.7) | 373.6 | 330.3 | (11.6) |
| மரக்கறிகள் | 1.8 | 2.1 | 19.5 | 26.4 | 26.1 | (1.4) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.9 | 2.3 | 19.8 | 31.5 | 31.5 | (0.1) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 8.9 | 7.6 | (15.3) | 129.3 | 110.0 | (14.9) |
| கடலுணவு | 22.8 | 22.3 | (2.3) | 219.1 | 236.6 | 8.0 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.3** | **3.9** | **17.2** | **47.8** | **48.6** | **1.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **940.9** | **979.6** | **4.1** | **10,340.9** | **10,856.2** | **5.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப் பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2018 நவெம்பரில் வணிகப்பொருள் இறக்குமதிகளிலிருந்தான செலவினம் 2017 யூனுக்குப் பின்னர் முதல் தடவையாக ஐ.அ.டொலர் 1,765 மில்லியன்களுக்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப்பொருள் மற்றும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்குப் பங்களித்து தனியாள் ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளின் தாக்கத்தை முக்கியமாக பிரதிபலித்த வேளையில் ஒப்பீட்டு ரீதியில் இலங்கை ரூபாவின் பாரிய தேய்வும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களித்திருக்கின்றன.

- நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018 நவெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு (ஆண்டுக்காண்டு) உணவு மற்றும் குடிபானம், அரிசி, காய்கறிகள் பாற்பண்ணை உற்பத்தி மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதிகளில் காணப்பட்ட குறைந்த செலவினமே காரணமாகும். உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிகளில் ஏற்பட்ட அத்தகைய குறைப்பிற்கு உயர்ந்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பன்னாட்டு சந்தையில் காணப்பட்ட குறைந்த பண்ட விலைகள் என்பனவற்றின் காரணமாக தாழ்ந்த இறக்குமதி அளவுகளின் இணைந்த தாக்கம் காரணமாக அமைந்தது. 2018 நவெம்பரில் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் வீட்டு உபயோகச் சாதனங்கள் போன்ற உணவல்லா நுகர்வுப் பொருட்களின் செலவினம் ஆண்டுக்காண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தமைக்கு அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களின் குறிப்பிட்ட வகை இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளே ஓரளவிற்கு காரணமாக அமைந்தன. தனியாள் உந்து ஊர்திகள் செலவினம் முன்னைய மாதத்திலிருந்து 2018 நவெம்பரில் 34.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டி தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. உந்து ஊர்திகளினதும் அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களினதும் இறக்குமதிகள் இனிவரும் காலப்பகுதியில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.


- 2018 நவெம்பரில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவீனம் வீழ்ச்சியடைந்தமைக்கு அநேக துணை வகைகளின் கீழ் இடம்பெற்ற குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாக அமைந்தது. குறிப்பாக 2017 நவெம்பருடன் ஒப்பிடுகையில் சீமெந்து மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான ஊர்திகளின் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையினை காணக்கூடியதாக இருந்தது.

- மாறாக, இடைநிலைப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் சிறியளவிலேனும் அதிகரித்தமைக்கு எரிபொருள், அடிப்படை உலோகங்கள் மற்றும் வளமாக்கி இறக்குமதிகள் தூண்டுதலாக அமைந்தன. எரிபொருள் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு மசகெண்ணெயின் இறக்குமதி அளவில் குறைப்பு பதிவுசெய்யப்பட்டதற்கு மத்தியிலும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் நிலக்கரி ஆகிய இரண்டினதும் உயர்ந்த இறக்குமதி விலைகளினதும் அளவுகளினதும் இணைந்த தாக்கமே காரணமாக அமைந்தது. அதேவேளை அடிப்படை உலோக உற்பத்திகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு என்பன தூண்டுதலாக அமைந்தன. எனினும், தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 நவெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2018 ஏப்பிறலில் தங்கத்தின் மீது விதிக்கப்பட்ட சுங்கத்தீர்வையின் தாக்கத்தைப் பிரதிபலித்தது. கோதுமை மற்றும் சோளம் மீதான செலவினமும் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்தளவுகள் இறக்குமதி செய்யப்பட்டமையே முக்கிய காரணமாக அமைந்தது. கனிப்பொருள்

உற்பத்திகள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து இறக்குமதி செலவினத்தின் மீதான அழுத்தத்தை தணிப்பதற்கு பங்களித்தது.


- 2018 நவெம்பரில் இறக்குமதி அளவு மற்றும் அலகு பெறுமதிச் சுட்டெண்கள் இரண்டும் முறையே 8.6 சதவீதத்தினாலும் 0.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இது இம்மாத காலப்பகுதியில் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தாழ்ந்த விலைகளுக்கு மத்தியிலும் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளில் ஏற்பட்ட குறைப்பினால் தூண்டப்பட்டமையினை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**





மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: தனிப்பட்ட ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் - 2018**




மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | நவெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | நவெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - நவெ 2017 ஐ.அ.டொ. மில் | சன - நவெ 2018 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **407.7** | **363.5** | **(10.8)** | **4,069.0** | **4,622.7** | **13.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 174.9 | 111.0 | (36.5) | 1,659.5 | 1,471.4 | (11.3) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 26.2 | 3.2 | (87.7) | 272.1 | 121.2 | (55.4) |
| இதில் அரிசி | 25.3 | 1.4 | (94.5) | 260.2 | 103.9 | (60.1) |
| பால் உற்பத்திகள் | 40.6 | 25.4 | (37.5) | 291.0 | 299.0 | 2.8 |
| மரக்கறிகள் | 39.4 | 21.8 | (44.8) | 327.4 | 277.9 | (15.1) |
| கடலுணவு | 15.5 | 15.9 | 2.5 | 199.2 | 182.4 | (8.4) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 20.0 | 13.4 | (33.3) | 233.8 | 223.4 | (4.4) |
| வாசனைத் திரவியங்கள் | 6.4 | 8.6 | 33.0 | 84.4 | 104.1 | 23.4 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 26.7 | 22.8 | (14.4) | 251.7 | 263.3 | 4.6 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 232.8 | 252.5 | 8.5 | 2,409.4 | 3,151.2 | 30.8 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 62.2 | 104.9 | 68.7 | 677.4 | 1,496.2 | 120.9 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 51.1 | 46.5 | (9.0) | 474.4 | 488.6 | 3.0 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 23.4 | 16.8 | (28.3) | 239.6 | 216.0 | (9.8) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 25.7 | 23.2 | (9.7) | 344.9 | 283.4 | (17.8) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 31.3 | 24.1 | (22.8) | 254.0 | 250.9 | (1.2) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாட வகைகள் | 16.9 | 12.8 | (24.5) | 169.5 | 156.4 | (7.7) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 22.2 | 24.2 | 9.2 | 249.7 | 259.7 | 4.0 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,072.5** | **1,074.6** | **0.2** | **10,242.0** | **11,504.9** | **12.3** |
| எரிபொருள் | 306.4 | 403.6 | 31.7 | 2,994.6 | 3,834.6 | 28.0 |
| இதில் மசகெண்ணெய் | 95.7 | 110.7 | 15.7 | 608.3 | 886.7 | 45.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 185.2 | 245.6 | 32.6 | 2,167.4 | 2,750.2 | 26.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 82.7 | 9.9 | (88.1) | 677.0 | 552.7 | (18.4) |
| இதில் தங்கம் | 72.7 | 0.1 | (99.9) | 570.7 | 438.7 | (23.1) |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 251.1 | 245.7 | (2.1) | 2,491.7 | 2,617.0 | 5.0 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 44.9 | 45.4 | 1.2 | 444.5 | 486.8 | 9.5 |
| கனிம உற்பத்திகள் | 35.5 | 12.8 | (63.8) | 201.5 | 171.0 | (15.1) |
| கோதுமை மற்றும் சோளம் | 58.2 | 22.0 | (62.1) | 353.9 | 348.6 | (1.5) |
| அடிப்படை உலோகங்கள் | 40.9 | 77.0 | 88.1 | 503.5 | 596.8 | 18.5 |
| வாகன மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் | 24.5 | 25.7 | 4.9 | 269.3 | 273.9 | 1.7 |
| இரசாயண உற்பத்திகள் | 72.1 | 73.2 | 1.5 | 762.1 | 834.3 | 9.5 |
| வளமாக்கி | 4.9 | 24.6 | 403.6 | 86.7 | 235.6 | 171.8 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 31.3 | 21.0 | (33.0) | 277.1 | 275.1 | (0.7) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 119.9 | 113.6 | (5.2) | 1,180.1 | 1,278.5 | 8.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **459.7** | **326.0** | **(29.1)** | **4,475.9** | **4,296.4** | **(4.0)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொறி மற்றும் கருவிகள் | 243.6 | 179.5 | (26.3) | 2,391.0 | 2,291.6 | (4.2) |
| கட்டடப் பொருட்கள் | 157.6 | 103.9 | (34.1) | 1,460.5 | 1,383.2 | (5.3) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 57.9 | 42.1 | (27.3) | 617.0 | 615.9 | (0.2) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.5 | 0.1 | 7.4 | 5.6 | (23.7) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **0.5** | **0.7** | **144.4** | **74.2** | **(48.6)** |
| **மொத்த இறக்குமதி** | **1,940.4** | **1,764.6** | **(9.1)** | **18,931.3** | **20,498.1** | **8.3** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- 2017 நவெம்பருடன் ஒப்பிடுகையில் ஜேர்மனி ஐக்கிய இராட்சியம் மற்றும் இந்தியா இருந்தான உயர்ந்தளவு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை காரணமாக 16.8 சதவீத வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டதனைத் தொடர்ந்து 2018 நவெம்பரில் சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் வலுவாக அதிகரிக்கத் தொடங்கின. 2018இன் முதல் பதினொரு மாதகாலப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2,080,627 ஆக விளங்கி 2017இன் தொடர்பான காலப்பகுதியினை விட 11.2 சதவீதங்கொண்ட வளர்ச்சியைக் காட்டியது. 2018 நவெம்பரில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 367 மில்லியன்களிலாக மதிப்பிடப்பட்டதுடன் 2018 முதல் பதினொரு காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,905 மில்லியன்களாக விளங்கின.


- 2018 நவெம்பரில் தொழிலாளர் பணவலுப்பல்கள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 555 மில்லியன்களுக்கு 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவலுப்பல்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,431 மில்லியனுக்கு 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 9: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்


- அரச பிணையங்கள் சந்தையும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் 2018 நவெம்பரில் வெளிநாட்டு முதலீட்டில் வெளிப்பாய்ச்சல்கள் இடம்பெற்றமையை காட்டின. அரச பிணையங்கள் சந்தை தொடர்ந்தும் வெளிநாட்டு முதலீடுகளின் எடுப்பனவுகளுக்கு உள்ளாகி நவெம்பரில் ஐ.அ.டொலர் 162 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து 2018 முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 802 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தது.

- இரண்டாந்தர மற்றும் முதலாந்தர சந்தைகளின் வெளிநாட்டு செலாவணிப் பாய்ச்சல்கள் இரண்டினையும் உள்ளடக்கிய கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2018 நவெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2018 முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 29 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் ஒன்றினைப் பதிவுசெய்தது. இது முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 77 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் இரண்டாந்தரச் சந்தையில் இருந்தான ஐ.அ.டொலர் 106 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் உள்ளடக்குகின்றது. அரசிற்கான நீண்டகால கடன்கள் 2018 நவெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2018 நவெம்பர் இறுதியில் உள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.0 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு 3.7 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 நவெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 9.7 பில்லியன்களாக விளங்கி 5.2 மாத இறக்குமதிகளுக்கு சமமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 சனவரி 28ஆம் நாள் வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக 0.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மேலும் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் யூரோ மற்றும் இந்திய ரூபா தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கு எதிராக ரூபா தேய்வடைந்தது.
- 2018 ஆண்டுப் பகுதியில், இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் ஏனைய முக்கிய நாணயங்களுக்கு எதிராகவும் தேய்வடைந்து வருகிறது

**வரைபடம் 11: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 சனவரி 28 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% |
| யூரோ | -12.7% | +0.8% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -3.2% |
| யப்பானிய யென் | -18.1% | -0.3% |
| கனேடியன் டொலர் | -9.3% | -2.4% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | -1.4% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.1% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி